இணைப்பு I

[23 ஆம் பக்கத்தில் இனம் 5(2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

வேலூர் நகராட்சியின் தற்போதைய மக்கட் தொகை 1,60,000-க்கு ஒரு நபருக்கு குறைந்த பட்சம் 15 காலன் தண்ணீர் வீதம் 24,00,000 காலன் குடி நீர் தினசரி தேவைப்படுகிறது. இந் நகராட்சியின் பாலாறு நீரேற்று நிலையத்திலிருந்து சாதாரண காலங்களில் 24,00,000 காலன் தண்ணீர் கிடைக்கப் பெற்று குறைந்த பட்ச விநியோகம் தட்டுப்பாடின்றி செய்யப் பட்டு வந்தது. ஓட்டேரி நீர்த் தேக்கத்திலிருந்து நீர் ஊற்றுகள் அடைப் பட்டு விட்டதால் தண்ணீர் வரத்து நின்று விட்டது. எனவே கிடைக்கப் பெற்ற பாலாற்று நீரையே நகரின் மொத்தப் பகுதிக்கும் தினசரி, காலை, மாலை என்று இரண்டு வேளைகளுக்கும் தட்டுப்பாடின்றி விநியோகம் செய்து வரப்பட்டது. இவ்வருடம் கோடைக் கால பருவ மழையும் பொய்த்ததின் காரணமாக எதிர் பாராத அளவு பாலாற்றில் நீர் மட்டம் ஜூன், ஜூலை மாதங்களிலேயே குறைய ஆரம்பித்து, பற்றாக்குறை ஏற்பட்ட போதிலும் தக்க நடவடிக்கைகள் மேற்கொண்டதன் காரணமாக தொடர்ந்து நகரின் குறைந்த பட்ச விநியோகமான 24,00,000 காலனை கொடுத்துவர முடிந்தது. செப்டம்பர், அக்டோபர் மாதங்களின் மழைக் கால பருவம் பொய்த்ததின் காரணமாகக் கிடைக்கும் நீரின் அளவு 21,00,000 காலன்களாகக் குறைய ஆரம்பித்த சமயம், 22—9—1980 முதல் நகரின் வட பகுதிக்கு காலையில் குடி நீர் விநியோகம் என்றும், மாலையில் தென் பகுதிக்கு குடி நீர் விநி யோகம் என்றும் மாற்றி அமைத்து ஒரு வேளை முறையில் செயல் படுத்தப் பட்டு வருகின்றது. இவைகளைத் தவிர நகரின் எல்லைப்புற பகுதிகளின் தட்டுப்பாடுகளை நிவர்த்தி செய்ய 28—10—1980 முதல் நகராட்சி மற்றும் தனியார் லாரியின் மூலம் நீர் கொண்டு சென்று விநியோகித்தும் வரப்படுகிறது. தொடர்ந்து பாலாற்றின் நீர் மட்டம் குறைந்து தண்ணீரின் வரத்து நாளுக்கு நாள் குறைந்து கொண்டு வருவதால், நகரின் குறைந்த பட்ச அளவு குடி நீர் விநியோகம் பராமரிக்க பாலாற்றின் 6 மற்றும் 7-ம் கிணறுகளில் உள் கிணறுகள் அமைத்தும், சத்துவாச்சாரி கூட்டு குடிநீர் திட்டத் திலிருந்து கூடுதலாகக் கிடைக்க கூடுதல் பம்பு செட் பொருத்தியும், ஓட்டேரியில் பழைய திறந்த வெளி கிணற்றில் மோட்டார்களை பொருத்தி, அஸ்பெஸ்டாஸ் ரப்பர் (Canvas Rubber House) குழாய் மற்றும் 6 அங்குலம் இரும்பு குழாய்களைப் புதியதாக வாங்கி இணைத்து கூடுதல் அளவு தண்ணீர் பெற்றும்,

1981 மார்ச் 5]

மேல் மணவூரில் நடைபெற்று வரும் குடி நீர் தலைமைப் பீட பணிகளில் விரையமாகிய தண்ணீரை (Waste water while driving radial filter arms in collector well) தற்காலிக முறையில் நீரேற்று குழாய்கள் மூலம் கொண்டு வந்தும் கீழ்க்கண்ட அளவுகள் படி பெற்று பராமரிக்கப்பட்டு வருகின்றது :—

1.	நகராட்சியின் பாலாறு நீரேற்று நிலையத்திலிருந்து	12,00,000	காலன்
2	நகராட்சியின் ஓட்டேரியிலிருந்து (25.11.1980 முதல்)	1,25,000	,,
3.	சத்துவாச்சாரி கூட்டு குடி நீர் திட்டத்திலிருந்து (15.1.1980) முதல் குடி நீர் தொட்டி மூலம்	2,25,000	,,
4.	மேல் மணவூர் தற்காலிக ஏற்பாட்டின் மூலம் (12.12.1980 முதல்)	85,000	,,
	மொத்த அளவு நீர்	16,35,000	,,

தற்பொழுது மேற்படி பெறப்படும் அளவு குடி நீர், குளிர் காலம் ஆனதால் ஓரளவு தன்னிறைவுடன் இருந்து வருகின்றது. ஆனால், வட ஆற்காடு மாவட்டத்தில் ஏற்பட்ட கடும் வறட்சி காரணமாக வேலூர் நகராட்சி குடி நீர் தட்டுப்பாட்டை நீக்கவும் பாலாறு நீரேற்று நிலையத்தை மேம்பாடு செய்யவும், நகராட்சியில் 75 குழாய்க் கிணறுகள் அமைக்கவும் ரூ. 20 இலட்சம், பாதி மான்யம்—பாதி கடன் முறையில் அரசு வழங்கியது. தமிழ் நாடு குடி நீர் வடிகால் வாரியம் குடி நீர்த் தட்டுப்பாடுகளை நிவர்த்திக்க, உடனடி ஆய்வுப் பணிகளை மேற்கொண்டுள்ளது. இந்நகராட்சியும் தொடர்ந்து, பாதுகாக்கப்பட்ட குடி நீர்த் தட்டுப்பாடுகள் எனப் பொது மக்கள் அறிவிக்கும் பகுதிகளை உடனுக்குடன் நேர் ஆய்வு செய்து நகராட்சி லாரி ஒன்றுடன் கூடுதலாக 3 தனியார் லாரிகளை அமர்த்தி தட்டுப் பாடு உள்ள பகுதிகளின் அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்து கொடுக்கப்பட்டு வருகின்றது. பருவ மழை இல்லாத காரணத்தால், இனி வரும் காலம் கோடை காலமாக இருப்பதனையும் கருத்தில் கொண்டு, கூடுதலாக மேலும் 4 இரும்புத் தொட்டிகளை திருவண்ணாமலை டான்சி மூலம் பெறவும், கூடுதலாக நகராட்சிக்கு குடி நீர் விநியோகத்திற்கு என ஒரு லாரி வழங்கவும், தமிழ் நாடு குடி நீர் வடிகால் வாரியம் மூலம் செயல் பட்டு வரும் மேல் மணவூர் தலைமைப் பீட வேலூர் உடனடி குடி நீர் திட்டத்தினை உடன் செயல் படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.